CC 280/2018

11.07.2023

பு.சா.1,

பெயர்: பாலசுப்பிரமணியம்

த/பெ. குட்டியப்பன்

பு.சா.1 குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியை எனக்கு எதன் அடிப்படையில் பழக்கம் என்றால் எனக்கு அவர் தூரத்து உறவினர் என்ற வகையில் பழக்கம். நான் 30 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். இதற்கு முன்னர் எதிரியிடம் ஏதேனும் வரவு செலவு உள்ளதா என்றால் இல்லை.

தின வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கி வருகிறேன் என்றால் சரியல்ல, குடும்ப செலவிற்காக கொடுத்தேன். எதிரி எப்போது என்னிடம் பணம் வாங்கினார் என்றால் 08.03.2018 ம் தேதி பணம் கேட்டார், நான் 09.03.2018 ம் தேதி பணம் கொடுத்தேன். எதிரி என்ன தேவைக்காக பணம் பெற்றார் என்றால் வீட்டில் அப்பாவிற்கு மருத்துவமனை செலவிற்காக தேவைப்படுவதாக கூறி பணம் பெற்றார்.

ரூ.5 இலட்சம் என்பது பெரிய தொகை என்றால் சரிதான். மேற்படி தொகையினை கேட்ட உடனேயே தயார் செய்து கொடுக்க இயலாது என்றால் சரிதான். மேற்படி தொகையினை ஒரு நபருக்கு கொடுக்கும்போது சாட்சியாக நபரை வைத்து தான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

எதிரிக்கு நான் என் வீட்டில் வைத்து தான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் எனது மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2018 ம் ஆண்டு எனது மகனுக்கு 18 வயது இருக்கும் என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.5 இலட்சம் தொகையினை ரூ.500 கட்டாக 10 கட்டு கொடுத்தேன் என்றால் சரிதான்.

என்னிடம் வாங்கும்போது எதிரி மட்டும் தான் வந்தார் என்றால் சரிதான். எதிரிக்கு சுமார் 12 -01.00 மணிக்குள் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் பணம் வாங்கியதற்கு ஆதரவாக காசோலை மட்டும் தான் கொடுத்தார்

என்றால் சரிதான். **(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.